**மே – 13**

# TNPSC துளிகள்

- ஐஐடி மெட்ராஸ் உலகளாவிய ஆராய்ச்சி அறக்கட்டளையானது, அடிப்படைத் தொழில்நுட்ப (Deep-Tech) ஆராய்ச்சி மற்றும் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்காக அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள மென்லோ பூங்காவில் தனது முதல் சர்வதேச மையத்தை நிறுவியுள்ளது.
- 2026-ஆம் ஆண்டிற்கான ஆர்க்கிபால்ட் பரிசு, மெல்போர்னைச் சேர்ந்த கலைஞர் ரிச்சர்ட் லூயருக்கு இலுவந்தி கென்னின் உருவப்படத்திற்காக வழங்கப்பட்டது.
    - இது 1921-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஓர் ஆஸ்திரேலிய உருவப்படக் கலை விருதாகும் என்பதோடு இது உருவப்பட ஓவியத்திற்காக ஆண்டுதோறும் வழங்கப் படுகிறது.
- அமெரிக்க தரவு அறிவியல் சபையின் (DASCA) அங்கீகாரத்தைப் பெற்ற இந்தியாவின் முதல் சிறப்பு நிறுவனம் (IoE) என்ற பெருமையை ஓ.பி. ஜிண்டால் குளோபல் பல்கலைக் கழகம் (JGU) பெற்றுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு மேற்கு வங்க மாநிலத்தின் முதல் பாஜக அரசை வழி நடத்த சுவேந்து அதிகாரி முதலமைச்சராகப் பதவியேற்றார்.
- ஹிமந்த பிஸ்வா சர்மா 2026 ஆம் ஆண்டு மே 12 அன்று தொடர்ந்து இரண்டாவது முறையாக அஸ்ஸாம் முதலமைச்சராகப் பதவியேற்றார் என்பதோடு இதன் மூலம் இப்பதவியில் தொடர்ந்து இருமுறை பணியாற்றும் முதல் காங்கிரஸ் அல்லாத தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றார்.
- தாவர ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மே 12 அன்று சர்வதேச தாவர ஆரோக்கிய தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026-ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Plant Biosecurity for Food Security" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் பதவியேற்பு விழா




- 17-வது தமிழ்நாடு சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் (சட்டமன்ற உறுப்பினர்கள்) 2026 ஆம் ஆண்டு மே 11 அன்று பதவியேற்றனர்.

- இந்த பதவியேற்பு விழா தற்காலிக சபாநாயகர் எம். வி. கருப்பையா முன்னிலையில் நடைபெற்றது.
- அவருக்கு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- ஆயிரம் விளக்கு தொகுதி எம்.எல்.ஏ. ஜே.சி.டி. பிரபாகர் சபாநாயகர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.
- முதலமைச்சர் விஜய், இதற்கான நியமன மனுக்களை சட்டமன்றச் செயலாளர் கே. சீனிவாசனிடம் வழங்கினார்.
- துணை சபாநாயகர் பதவிக்கு துறையூர் சட்டமன்ற உறுப்பினர் எம். ரவிசங்கரை விஜய் பரிந்துரைத்தார்.
- முதலமைச்சர் விஜய் தனது திருச்சி கிழக்கு தொகுதியை ராஜினாமா செய்ததை அடுத்து, சட்டமன்றத்தின் பலம் 233 ஆக மாறியது.

## தற்காலிக சபாநாயகர்




- 17-வது தமிழ்நாடு சட்டமன்றத்தின் புதிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தற்காலிக சபாநாயகர் எம். வி. கருப்பையா 11 மே 2026 அன்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- தற்காலிக சபாநாயகர் என்பது இரண்டு சட்டமன்றங்களுக்கு இடையிலான மாற்றத்தின் போது நியமிக்கப் படும் ஒரு தற்காலிக தலைமை அதிகாரி ஆவார்.
- "ப்ரோ டெம்" (Pro-tem) என்பதன் பொருள் "தற்காலத்திற்கு" என்பதாகும்.
- புதிய சட்டமன்றம் அமைப்பதற்கும், நிரந்தர சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதற்கும் இடையே இவர் ஒரு பாலமாகச் செயல்படுகிறார்.
- புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு (MLAs) பதவிப் பிரமாணம் செய்து வைப்பதே இவரது முக்கியப் பணியாகும்.
- நிரந்தர சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் தேர்ந்தெடுக்கப் படும் வரை இவர் சபையை வழி நடத்துவார்.
- பொதுவாக, அவையில் அதிக முறை தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த உறுப்பினர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார், இருப்பினும் இது சட்டப்பூர்வமான விதி அல்ல.
- மாநிலச் சட்டமன்றங்களில் ஆளுநரும், மக்களவையில் இந்தியக் குடியரசுத் தலைவரும் தற்காலிக சபாநாயகரை நியமித்து பதவிப் பிரமாணம் செய்து வைக்கின்றனர்.

- தற்காலிக சபாநாயகரின் பணிகள் மக்களவை மற்றும் மாநிலச் சட்டமன்றங்கள் இரண்டிலும் ஒரே மாதிரியானவை.
- சபையின் நிரந்தர சபாநாயகர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் தற்காலிக சபாநாயகரின் பதவி தானாகவே முடிவுக்கு வரும்.

## சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை




- பெண்களின் பாதுகாப்பை வலுப்படுத்தவும், மாநிலம் முழுவதும் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தமிழக அரசால் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது.
- இந்த அதிரடிப்படை முதல்வர் சி. ஜோசப் விஜய் அவர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குகிறது.
- முதற்கட்டமாக இந்த படையில் 36 பணியிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன மற்றும் இது ஒரு காவல்துறைத் தலைவர் (IGP) தலைமையில் செயல்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட பணியிடங்களில் ஒரு காவல்துறைத் தலைவர் (IGP), ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் (SP), இரண்டு துணைக் காவல்துறை கண்காணிப்பாளர்கள் (DSPs), நான்கு ஆய்வாளர்கள், எட்டு உதவி ஆய்வாளர்கள் மற்றும் இதர தரவரிசையில் 20 காவலர்கள் உள்ளனர்.
- முக்கியமாக பெண்கள் பாதுகாப்பு தொடர்பான தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவே இந்த அதிரடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது.
- மாநிலம் முழுவதும் பெண்கள் பாதிக்கப்படக் கூடிய மற்றும் குற்றங்கள் அதிகம் நடக்க வாய்ப்புள்ள பகுதிகளை இது கண்டறியும்.
- பெண்கள் அடிக்கடி செல்லும் இடங்களில் இந்தப் பிரிவினர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

- பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் இதர பொது இடங்கள் முக்கிய கவனத்திற்குரிய பகுதிகளாக இருக்கும்.

# தேசியச் செய்திகள்

## பிரதமர் மோடியின் சமீபத்திய ஆலோசனைகள்





- உலகளாவிய நிச்சயமற்ற தன்மை, உயர்ந்து வரும் எண்ணெய் விலைகள் மற்றும் விநியோகச் சங்கிலி சிக்கல்களுக்கு மத்தியில், எரிபொருள் சேமிப்பு மற்றும் பொருளாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடி குடிமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.
- இந்தியா தனது கச்சா எண்ணெய் தேவையில் 85-90% இறக்குமதி செய்வதுடன் இது உலகளாவிய எண்ணெய் விலை உயர்வு மற்றும் அந்நியச் செலாவணி அழுத்தத்தால் நாட்டை பாதிப்படையச் செய்கிறது.
- பெட்ரோல் மற்றும் டீசல் பயன்பாட்டைக் குறைத்தல், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துதல், வாகனப் பகிர்வு (Carpooling) முறையை ஊக்குவித்தல், வீட்டிலிருந்தே வேலை செய்தல் மற்றும் இணையவழிக் கூட்டங்களை நடத்துதல் உள்ளிட்ட ஆலோசனைகளை அவர் வழங்கினார்.
- சரக்குப் போக்குவரத்தை ரயில்வேக்கு மாற்றவும், தேவையற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்கவும் குடிமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.
- இறக்குமதி அழுத்தத்தைக் குறைக்க வெளிநாட்டுத் திருமணங்களைத் தவிர்க்கவும் மற்றும் தேவையற்ற தங்கம் வாங்குவதைத் தவிர்க்கவும் பிரதமர் அறிவுறுத்தினார்.
- "இந்தியாவில் தயாரிப்போம்" தயாரிப்புகளுக்கு ஆதரவளித்தல், சமையல் எண்ணெய் நுகர்வைக் குறைத்தல் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களைப்

பயன்படுத்துதல் ஆகியவை இந்த ஆலோசனைகளில் ஊக்குவிக்கப்பட்டன.

- ரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்து இயற்கை விவசாய முறைகளை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.
- எரிபொருள் இறக்குமதி மற்றும் ஆற்றல் சார்ந்திருப்பைக் குறைக்க மின்சார வாகனங்கள் (EVs), சூரிய சக்தியால் இயங்கும் மாற்றுகள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்புகள் ஆகியவற்றையும் இந்த நடவடிக்கைகள் ஊக்குவிக்கின்றன.

## உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 2026




- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை (தலைமை நீதிபதி உட்பட) 34-லிருந்து 38-ஆக உயர்த்த, உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா 2026-க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தத் திருத்தம் உச்ச நீதிமன்ற (நீதிபதிகளின் எண்ணிக்கை) சட்டம், 1956-இல் மாற்றத்தைக் கொண்டு வரும்.
- 2019-ஆம் ஆண்டிற்குப் பிறகு உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை உயர்த்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- வழக்குகளின் தேக்கம் அதிகரிப்பு மற்றும் கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு அதிகரித்துள்ள டிஜிட்டல் மின்னணுத் தாக்கல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- அரசியலமைப்பின் சரத்து 124(1), ஒரு சட்டத்தின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.
- இந்த மசோதா மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- அரசியலமைப்பின் கீழ் உச்ச நீதிமன்றத்தின் அசல் எண்ணிக்கை ஒரு தலைமை

நீதிபதி மற்றும் ஏழு இதர நீதிபதிகள் என இருந்தது.

- 92,000-க்கும் மேற்பட்ட தேங்கிக்கிடக்கும் வழக்குகளைக் கையாள்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

# மாநிலச் செய்திகள்

## Road RADAR முன்னெடுப்பு

- டெல்லியில் தினசரி தரைமட்ட ஆய்வுகள் மூலம் காற்று மாசுக்கான ஆதாரங்களைக் கண்டறிய, டெல்லி மாசு கட்டுப்பாட்டு வாரியம் (DPCC) Road RADAR (சாலைகளில் நிகழ்நேர காற்று மாசுபாடு கண்டறிதல்) என்ற முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- மாசுபாட்டின் ஆதாரங்கள் மீது விரைவான நடவடிக்கை எடுக்க, MCD-311 மொபைல் செயலி மூலம் புவிசார் குறியீடு செய்யப்பட்ட அறிக்கையிடல் முறையை இந்தத் திட்டம் பயன்படுத்துகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் டெல்லி முழுவதும் ஒவ்வொரு மாதமும் சுமார் 18,000 கி.மீ சாலைகள் ஆய்வு செய்யப்படுகின்றன.
- சாலைப் புழுதி, குப்பைகள், உயிரியக்கழிவு எரிப்பு, நெகிழி எரிப்பு மற்றும் கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவுகள் உட்பட 11 வகையான மாசு காரணிகளை Road RADAR கண்காணிக்கிறது.
- நிகழ்நேரக் கண்காணிப்பு, நிர்வாகப் பொறுப்புக்கூறல் மற்றும் மாசு தொடர்பான புகார்களுக்கு விரைவான தீர்வை வழங்குவதை இந்தத் முன்னெடுப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.





## PMAY-U 2.0 திட்டத்தில் ஒடிசாவின் நிலை

- 2026 ஆம் ஆண்டு மே 8 நிலவரப்படி, பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா-நகர்ப்புறம் (PMAY-U) 2.0 என்ற திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டி முடிப்பதில் ஒடிசா முதன்மையான மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- தகுதியுள்ள நகர்ப்புற ஏழைகள் மற்றும் நடுத்தர வருமானக் குடும்பங்களுக்கு கான்கிரீட் /நிலையான வீடுகளை வழங்குவதற்காக 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் PMAY-U 2.0 தொடங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் முதல் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வீடுகளைக் கட்டி முடிப்பதில் ஒடிசா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

- ஒடிசாவில் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 24,625 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது, அதில் சுமார் 23,464 இடங்கள் கண்காணிப்பு மற்றும் அமலாக்கத்திற்காக புவிசார் குறியீடு செய்யப்பட்டுள்ளன.
- 2026 ஆம் ஆண்டு மே 5 நிலவரப்படி, 3,134 வீடுகளுக்கு அஸ்திவாரப் பணிகள் தொடங்கப்பட்டு, 2,008 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டி புவிசார் குறியீடு, அஸ்திவாரக் கண்காணிப்பு மற்றும் பூர்த்தி கண்காணிப்பு ஆகிய முறைகளை இந்தத் திட்டம் பயன்படுத்துகிறது.




## ஜார்க்கண்ட்டில் இடைநிற்றல் இல்லா நிலை




- UDISE+ தரவு மற்றும் நிதி ஆயோக் (NITI Aayog) அறிக்கையின்படி, 2024-25 ஆம் ஆண்டில் ஜார்கண்ட் மாநிலம் ஆரம்பப் பள்ளிகளில் 0% இடைநிற்றல் விகிதத்தைப் பதிவு செய்து உள்ளது.
- ஜார்க்கண்டின் ஆரம்பப் பள்ளி இடைநிற்றல் விகிதம் 2014-15 ஆம் ஆண்டில் 6.41% ஆக இருந்தது, தற்போது 2024-25 ஆம் ஆண்டில் 0% ஆகக் குறைந்துள்ளது.
- உயர் தொடக்கப் பள்ளி இடைநிற்றல் 7.42%-லிருந்து 1.7% ஆகவும், உயர்நிலைப் பள்ளி

இடைநிற்றல் 23.2%-லிருந்து 3.5% ஆகவும் குறைந்துள்ளது.

- UDISE+ என்பது இந்தியாவில் பள்ளிக் கல்வி புள்ளி விவரங்களுக்காகப் பயன்படுத்தப் படும் தேசிய தரவுத்தளமாகும்.
- இந்தியாவில் ஆரம்பக் கல்வி என்பது பொதுவாக வகுப்பு I முதல் V வரையிலும், உயர் தொடக்கக் கல்வியானது வகுப்பு VI முதல் VIII வரையிலும் அமையும்.
- 2024-25 ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதத்தைக் குறைப்பதில் ஜார்க்கண்ட் தேசிய அளவில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஸ்காட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் – மணிவண்ணன்

- மணிவண்ணன் ஸ்காட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் (MSP) தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- இவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு பாலின அடையாளமற்ற திருநம்பி ஆவார்.
- ஸ்காட்லாந்து நாடாளுமன்றமானது ஸ்காட்லாந்தின் அதிகாரப் பரவலாக்கப்பட்ட சட்டமன்றமாகும், இது எடின்பர்க்கில் உள்ள ஹோலிரூட்டில் அமைந்து உள்ளது.
- ஸ்காட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் MSPs (ஸ்காட்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள்) என்று அழைக்கப்படுகிறார்கள்.
- ஐக்கியப் பேரரசில் வசிக்க நிரந்தர விசா எதுவும் இல்லாமல் ஹோலிரூட்டிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட முதல் நபர் மணிவண்ணன் ஆவார்.




# முக்கிய தினங்கள்

## இரண்டாம் உலகப் போரின் போது உயிரிழந்தவர்களுக்கான நினைவு மற்றும் நல்லிணக்க காலம் 2026 – மே 8 மற்றும் 9

- இந்த அனுசரிப்பு 2004-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.
- இது இரண்டாம் உலகப் போரின்போது (1939-1945) உயிர்நீத்த லட்சக்கணக்கான

பொதுமக்கள் மற்றும் வீரர்களை நினைவு கூர்கிறது.

- மே 8-ஆம் தேதி ஐரோப்பாவின் வெற்றி தினமாக (VE Day) கொண்டாடப்படுகிறது, இது 1945-ஆம் ஆண்டில் நாஜி ஜெர்மனியின் நிபந்தனையற்ற சரணடைதலைக் குறிக்கிறது.
- இந்த அனுசரிப்பு அமைதி, நல்லிணக்கம், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.
- இரண்டாம் உலகப் போரானது, வருங்காலப் போர்களைத் தடுப்பதற்காக 1945-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்படுவதற்கான சூழலை உருவாக்கியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★